இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 30-11-2023

# சமூக நீதியில் அடைய வேண்டியவை!

சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களது சிலைத் திறப்பு விழாவில் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூகநீதி வரலாற்றில் நாம் அடைய வேண்டிய இலக்குகளை விரிவாகப் பட்டியலிட்டுள்ளார்கள்.

★ கல்வி நிறுவனங்களில் ஓ.பி.சி. இடஒதுக்கீடு 2006க்கு பிறகுதான் நடைமுறைக்கு வந்தது.

★ பல்கலைக்கழக மானியக்குழு இணை இயக்குநர் பதவிக்கு இடஒதுக்கீடே கிடையாது. எல்லாமே பொதுப்பிரிவு!

★ ஒன்றிய அரசின் துறைச் செயலாளர்கள் 89 பேரில் பட்டியலினப் பிரிவைச் சேர்ந்தவர் ஒரே ஒருவர்,பழங்குடிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் 3 பேர். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர் கூட கிடையாது!

★ ஒன்றிய அரசு துறைகளின் கூடுதல் செயலாளர்கள் 93 பேரில், பிற்படுத்தப்பட்டவர் ஒருவர் கூட கிடையாது!

★ ஒன்றிய அரசு துறைகளின் இணைச் செயலாளர்கள் 275 பெயரில், 19 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள்!

★ அசாம், உத்தரப் பிரதேசம்,சத்தீஸ்கர், ஜார்கண்ட் உள்ளிட்ட பல மாநிலங்களில் இருக்கின்ற மத்திய சட்டப் பல்கலைக்கழக மாணவர் சேர்க்கையில் இந்த ஆண்டு வரை இடஒதுக்கீடே இல்லாத நிலைதான் நீடிக்கிறது.

★ 45 மத்தியப் பல்கலைக்கழகங்களில், பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பேராசிரியர்கள் 4விழுக்காடு மட்டுமே.

★ 2018 முதல் 2023 வரை நாடு முழுவதும் உயர்நீதி மன்றங்களில் நியமிக்கப்பட்ட 604 நீதிபதிகளில், 72 பேர் மட்டும்தான் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள்.

★ உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு முறை அமல்படுத்தப்படவில்லை.

★ அரசுத் துறைகளின் பதவி உயர்வுகளின் போது இடஒதுக்கீடு முறை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

★ தாமதப்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பை அந்தக் கணக்கெடுப்பின்போது சாதிவாரி கணக்கெடுப்பையும் ஒன்றிய அரசு நடத்த வேண்டும்.

★ பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு முழுமையாக முறையாக வழங்கப்படவேண்டும்.

★ பட்டியலின பழங்குடியின மக்களுடைய இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்படவேண்டும்.

★ சிறுபான்மையினர் இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்பட வேண்டும்.

★ இதையெல்லாம் அகில இந்திய ரீதியில் கண்காணித்து, உறுதி செய்ய அனைத்துக் கட்சி எம்.பிக்கள் கொண்ட குழு அமைக்கப்படவேண்டும். இதனையெல்லாம் அகில இந்திய அளவில் சமூகநீதியில் ஆர்வம் கொண்ட அனைத்து அரசியல் இயக்கங்களும் ஒற்றுமையாக இணைந்து மக்கள் நலனுக்காகச் செயல்படவேண்டும்.

இவைதான் மாண்புமிகு முதலமைச்சர் வைத்த இலக்குகள் ஆகும். கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய இரண்டும் இதில் மிக முக்கியமானவையாக அமைந்துள்ளது. கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய இரண்டுக்குமான தடையை உடைத்தால் போதும், அதுவே அடுத்தடுத்த வெற்றியை உருவாக்கித் தரும். இதனை தான் வி.பி.சிங் சொன்னார்.

**“கல்வி வேறு, அறிவு வேறு. அந்த அறிவு மனிதனுக்கு அதிகாரத்தைத் தர இருக்கிறது. அப்படி அறிவு அதிகாரத்தைத் தருகிறது என்பதை ஈராயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே ‘அவர்கள்’ உணர்ந்தார்கள். அதனால்தான் அதிகாரத்தைத் தங்கள் கையிலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று கருதி, ஒன்றைச் செய்தார்கள். மற்றவர்கள் படித்து அறிவு பெறக் கூடாது என்று நினைத்தார்கள். அப்படி நினைத்ததால்தான், சூத்திரர்கள் வேதத்தைப் படித்தால், அவர்கள் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்று என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு அறிவுத் துறையைத் தங்கள் கையிலே ஏகபோகமாக வைத்துக் கொண்டார்கள்.**

**ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை, தொழில் நுணுக்கங்களைக் கொடுக்க மறுத்தார்கள். இருந்த போதிலும் தானாகவே முயன்று ஏகலைவன் (வில் வித்தையைக்) கற்றுக் கொண்டான். அவனது கட்டை விரலையே வெட்டி விட்டார்கள். பணத்தை தருவார்கள், பொருளைத் தருவார்கள், கல்வியை மட்டும் தர மாட்டார்கள்”** என்பதை தெளிவுபடுத்தி பேசினார் வி.பி.சிங் அவர்கள்.

“ஒரு குடும்பத்தில் அண்ணன் தம்பிகளிடையே பாகப் பிரிவினை நடந்தது. வீட்டில் இருந்த ஒரே மாட்டையும் இரண்டாகப் பிரித்துவிட வேண்டும் என்றார்கள். மாட்டின் தலைப்பகுதி தம்பிக்கும் பின்பகுதி அண்ணனுக்கும் பிரிக்கப்பட்டது. தம்பியின் கடமை ஒவ்வொரு நாளும் தலைப் பகுதியிலுள்ள வாய்க்கு மாட்டின் தீவனம் போட வேண்டும். அண்ணனோ ஒவ்வொரு நாளும், பின் பகுதியிலுள்ள மாட்டின் மடியிலிருந்து பால் கறந்து கொண்டே இருந்தார்.எத்தனை காலத்துக்குத்தான் இந்த அநீதியை தம்பி சகித்துக் கொண்டிருப்பான்? ஒரு நாள் அண்ணன் பால் கறந்து கொண்டிருக்கும்போது தம்பி, தலைப்பகுதியிலிருந்த கொம்பைப் பிடித்து ஆட்டி விட்டான். அவ்வளவுதான்; இத்தனை ஆண்டுகாலம் தீனி போடாமலேயே பாலை மட்டும் கறந்து கொண்டிருந்த அண்ணனை மாடு எட்டி உதைத்தது. அண்ணன் இது அநீதி; அநியாயம் என்று அலறுகிறான். அந்தக் கொம்பைப் பிடித்து ஆட்டிய வேலையைத்தான் நான் செய்தேன்” என்று சொன்னவர் வி.பி.சிங் அவர்கள்.

இன்றைக்கு இடஒதுக்கீட்டுக்கு வேட்டு வைக்கத் துடிப்பது இதனால்தான். நீட் தேர்வைக் கொண்டு வந்து மருத்துவக் கனவை சிதைத்துவிட்டார்கள். புதிய கல்விக் கொள்கையானது அனைவரையும் தரநீக்கம் செய்யும் கல்வியாக மாறப் போகிறது. ‘ஒரே தகுதி முறை’ என்பதன் மூலமாக அனைவரையும் பலவீனப்படுத்தப் பார்க்கிறார்கள். இவை அனைத்தையும் உடைக்கும் ஒரே ஆயுதமாக இருக்கப் போவது சமூகநீதி எனப்படும் இடஒதுக்கீடு முறையே ஆகும்.

**பட்டியலின பழங்குடியின மிகவும் பிற்படுத்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையின மகளிர் மாற்றுத்திறனாளிகள் திருநங்கையர் விளிம்பு நிலை மக்கள் அனைவர்க்கும் இடஒதுக்கீடு வழங்கி அதிகாரத்தை சமப்படுத்த வேண்டும். அனைத்து தரப்பட்ட மக்களும் பங்களிப்பதே அதிகாரச் சமநிலை ஆகும். அதனை நோக்கிய இலக்குகளையே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்துள்ளார்கள். ‘இந்தியா’ கூட்டணி ஆட்சி அமையும் போது இவை சமூகநீதி இலக்குகளாக நிச்சயம் அமையும்.**

●●

மணல் குவாரி விவகாரத்தில் போலி ஆதாரங்களை வைத்து அமலாக்கத்துறை வழக்குப் பதிவு!

# தி.மு.க. அரசு மீது களங்கம் விளைவிக்கவே - அமலாக்கத்துறையை ஒன்றிய அரசு ஏவுகிறது!

## மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. பேட்டி – கடும் கண்டனம்!

**புதுடெல்லி, நவ.30-**

**மூத்த வழக்கறிஞரும் - நாடாளுமன்ற மாநிலங்களவை கழக உறுப்பினருமான என்.ஆர்.இளங்கோ, நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், “மணல் குவாரி விவகாரத்தில் போலி ஆதாரங்களை வைத்து அமலாக்கத்துறை வழக்குப் பதிகிறது!” என்றும், “தி.மு.க. அரசு மீது களங்கம் விளைவிக்கவே - அமலாக்கத்துறையை ஒன்றிய பா.ஜ.க. அரசு ஏவுகிறது” என்றும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அளித்த பேட்டி வருமாறு :-

அமலாக்கத் துறை சட்டவிரோத பண பரிமாற்றச் சட்டத்தின் அடிப்படையில் விசாரிக்க வேண்டும் என்றால், அதற்கு அடிப்படையான ஒரு வழக்கு உரிய காவல்துறையால் பதியப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும். அமலாக்கத்துறை 4 முதல் தகவல் அறிக்கையை வைத்துக்கொண்டு இந்த வழக்கை விசாரிக்கப் போவதாக சொல்லியுள்ளார்கள். அந்த 4 வழக்குகளும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட மணல் குவாரிகளுக்குச் சம்பந்தம் இல்லாதவை. தனியார் மணல் கொள்ளைக்காரர்களால் நடத்தப்பட்ட குவாரிகளில் போலியாக ஆதாரங்களை வைத்துக்கொண்டு அமலாக்கத் துறை இந்த வழக்கைப் பதிவுசெய்து தமிழ்நாடு அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் விசாரித்து வருகின்றனர்.

அமலாக்கத்துறை தன்னுடைய பதிலில், ‘நாங்கள் எவ்வளவு மணல் கொள்ளை நடந்துள்ளது என்பதைச் சேகரித்துள்ளோம்’ என பொய்யான தகவல்களை உயர்நீதிமன்றத்தில் கொடுத்துள்ளார்கள். ஆனால் மணல் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதை விசாரிக்க அமலாக்கத்துறைக்கு அதிகாரம் இல்லை என்பதை உயர்நீதிமன்றம் சொல்லியுள்ளது.

மணல் விவகாரத்தில் கொள்ளை போயிருப்பதாக அமலாக்கத்துறைக்குத் தகவல் கிடைத்தாலும், சட்டவிரோத பணபரிமாற்றச் சட்டம் 66இன்கீழ் அரசிற்கும், அரசின் புலன் விசாரணை அமைப்புகளுக்கும் தகவல் தந்துதான் விசாரிக்கச் சொல்லியிருக்க வேண்டும், அமலாக்கத் துறையினரே அந்த விசாரணையை நடத்தக் கூடாது.

அதேபோல் மாநில புலன் விசாரணை அமைப்புகளால் மணல் உட்பட ஏதேனும் விவகாரங்களில் குற்றம் நடந்திருப்பதாக முதல் தகவல் அறிக்கை கொடுக்கப்பட்டால் மட்டும் தான், அந்த விவகாரத்தில் சட்டவிரோதமாகப் பணம் கைமாறப்பட்டுள்ளதா என்ற வகையில் அமலாக்கத் துறை விசாரணை நடத்த முடியும். தங்களுக்கு அதிகாரம் இல்லாத, மணல் கொள்ளை நடந்ததா இல்லையா என்ற விசாரணையை அமலாக்கத் துறைச் சட்டத்திற்குப் புறம்பாக நடத்தக் கூடாது என்றுதான் வாதம் செய்தோம். அதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

### பா.ஜ.க.வின் கையாளான அமலாக்கத்துறை!

சட்டப்படி அமலாக்கத் துறை இந்த விசாரணையைச் செய்ய முடியாது. ஒருவேளை மணல் விவகாரத்தில் முறைகேடு நடைபெற்றதாக அமலாக்கத் துறைக்குத் தெரிய வந்திருந்தால், அந்த தகவலைத் தமிழ்நாடு அரசின் புலன் விசாரணை அமைப்புகளுக்குத் தெரியப்படுத்தினால், அந்தப் புலன் விசாரணை அமைப்புகள் மட்டுமே விசாரிக்க முடியும். அப்படி புலன் விசாரணை அமைப்புகள் விசாரணை மேற்கொண்டு தவறு நடந்திருப்பதாக முதல் தகவல் அறிக்கை கொடுத்தால், அதனடிப்படையில் சட்டவிரோதமாகப் பணப் பரிமாற்றம் நடந்துள்ளதா என்ற விசாரணையை மட்டும்தான் அமலாக்கத் துறைச் செய்ய முடியும்.

அரசு அதிகாரிகளை அழைக்கும்போது பிரிவு 50 (2)இன் கீழ் சம்மன் கொடுக்க அதிகாரம் கிடையாது. அது முறையற்ற புலன் விசாரனை. சட்டவிரோத பணப்பரிமாற்ற சட்ட அடிப்படையில் அமலாக்கத் துறையினர் மாநில அரசின் அதிகாரிகளை விசாரிக்க வேண்டும் என்றால் பிரிவு 54இன்கீழ் மட்டும்தான் சம்மன் கொடுத்து விசாரிக்க வேண்டும். ஒன்றிய அரசு எங்குப் புலன் விசாரணை செய்ய வேண்டுமோ, அங்கு மட்டும் தான் செய்ய வேண்டும். மாநில அரசின் அதிகாரங்களைக் கையில் எடுப்பது மாநில சுயாட்சிக்கு எதிரானது என்ற வாதத்தையும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த வழக்கை பா.ஜ.க.வின் கையாளாகச் செயல்படும் அமலாக்கத் துறை தமிழ்நாடு அரசின் மீது களங்கம் விளைவிக்க மட்டுமே போட்டுள்ளார்கள் என்பது அவர்கள் தந்துள்ள பதில் மனுவிலே குறிப்பிடப்பட்டுள்ளது. 2016 தேர்தலில் பா.ஜ.க. தனித்துப் போட்டியிட்டது. அப்போது தேர்தல் பரப்புரையில் அமித்ஷா, அ.தி.மு.க. ஆட்சியில் ஏறக்குறைய 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மணல் கொள்ளையில் ஈடுபட்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டார். ஆனால் பா.ஜ.க.வினர், அ.தி.மு.க. மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வியும் எழுகிறது. இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் மணல் கொள்ளை குறித்த வழக்குகள் நடைபெற்று கொண்டுள்ளன. பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் எவ்வளவு மணல் கொள்ளை வழக்குகள் உள்ளன என்ற பட்டியலையும் நீதிமன்றத்திலும் சமர்பித்துள்ளோம். அங்கு அமலாக்கத்துறையினர் எந்தப் புலன் விசாரனைகளையும் மேற்கொள்ளவில்லை.

2024 தேர்தலை எதிர்நோக்கி உள்ள நேரத்தில், தி.மு.க. அரசிற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் நோக்கில் 4730 கோடி ரூபாய் அரசிற்கு வந்திருக்க வேண்டியது வரவில்லை என பதில் மனுவில் குறிப்பிட்டுள்ளனர். 201112ஆம் ஆண்டில் 31 லட்சம் லோடுகள் மணல் விற்பனை அரசால் நடந்துள்ளது. 2020-21இல் 1.5 லட்சம் லோடுகள் மட்டும் தான் விற்பனை செய்ய முடிந்தது. ஆற்று மணலுக்கு பதிலாக இசேண்ட் மணல் விற்பனைக்கு வந்ததால் மக்களிடம் ஆற்று மணல் வாங்கும் ஆர்வம் குறைந்து விட்டது. 2021-22ஆம் ஆண்டில் அது 80 ஆயிரம் லோடுகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த அடிப்படை ஆய்வுகூட இல்லாமல் 27.75 லட்சம் லோடுகள் விற்கப்பட்டிருக்க வேண்டும் என்ற தவறான கணக்கை பதில் மனுவில் தாக்கல் செய்துள்ளனர். விளக்கம் கேட்ட நோட்டீசில், தமிழ்நாடு அரசு மணல் கொள்ளையைத் தடுக்க சிறப்பான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு அரசியல் காழ்ப்புணர்ச்சி மட்டும்தான் காரணம் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

பா.ஜ.க.வின் முகத்திரை கிழிக்கப்பட்டுள்ளதாலும், மக்கள் அவர்கள் மீது கோபமாக இருப்பதாலும் மிகப்பெரிய பின்னடைவு வரக்கூடிய தேர்தலில் அவர்களுக்கு ஏற்படும்.

பா.ஜ.க.வினர் யாரையாவது திட்டுகிறார்கள் என்றால், அவர்கள் நல்லவர்கள் என்று மக்கள் புரிந்துகொள்வார்கள். பொய்யர்கள் கூறுவதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி விரிசல் என்பதும் போலியான நாடகம் என்பதை பலமுறை தி.மு.க.வின் மூத்த தலைவர்கள் கூறியுள்ளனர்.

### துன்புறுத்தல்!

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் மீது மட்டும்தான் பா.ஜ.க. வினர் வழக்குப் போட்டுள்ளனர். அரசு அதிகாரிகளை மிரட்டி ஒரு வாக்குமூலம் வாங்கினால் அதை வைத்து வழக்கு போட முடியாதா என்றும் அமலாக்கத்துறையினர் பார்க்கின்றனர். முத்தையா என்ற அதிகாரி கூறும் போது கூட, தன்னைத் துன்புறுத்தி அமலாக்கத்துறையினர் வாக்குமூலம் வாங்கியதாக பதில் மனுவில் குறிப்பிட்டுள்ளதோடு காவல்துறையில் புகாரே கொடுத்துள்ளார்.

இந்த வழக்கை முழு விசாரணைக்கு வரும் 21ஆம் தேதி எடுத்துக்கொள்வதாக நீதிமன்றம் கூறியுள்ளது. அப்போது அரசு குவாரிகளில் எந்தவிதமான மணல் கொள்ளையும், முறைகேடுகளும் நடக்கவில்லை என்பதை உரிய ஆதாரங்களுடன் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்போம்.

சட்டவிரோத பணப்பரிமாற்ற சட்ட அடிப்படையில் சிறையில் இருக்கும் ஒருவர், ஜாமீன் வேண்டும் என்றால், எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை என்பதை நீதிமன்றத்திற்கு நிரூபிக்கும் வகையில் ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அதேநேரம் அவரின் உடல்நிலை பாதிப்படைந்திருந்தால் இந்த விதி தளர்த்தப்படும். அதனால்தான் மருத்துவக் காரணங்களுக்காக ஜாமீன் கேட்டோம். அது நீதிமன்றத்திற்குத் திருப்தியாக இல்லை என்பதால், கீழ் நீதிமன்றத்திற்குச் சென்று முறையிடச் சொல்லியுள்ளார்கள். ஜாமீன் வழங்குவதற்காக முகாந்திரம் இல்லை என நீதிமன்றம் கருதியிருந்தால் டிஸ்மிஸ் செய்திருக்கலாம், ஆனல் அப்படிச் செய்யாமல், ஜாமீன் வழங்க முகாந்திரம் இருப்பதால், கீழ் நீதிமன்றம் சென்று மெரிட்ஸ் படி கேட்க அறிவுறுத்தியுள்ளார்கள்.

செந்தில்பாலாஜி தொடர்புடைய வழக்கும் பொய்யான ஆதாரங்களின் அடிப்படையில்தான் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. அதை மெரிட்ஸ்படி ஜாமீன் கேட்கும் போது தாக்கல் செய்வோம்.

இவ்வாறு என்.ஆர்.இளங்கோ எம்.பி. தனது பேட்டியில் குறிப்பிட்டார்.

